வெளியீடு எண் 833.

1022

உ

குருபாதம்

புன்கூர்ச் சிவப்பிரகாசர்

இயற்றிய

சிவப்பிரகாசக் கட்டளை

ACC
NO 25257

ஞானசம்பந்தம் பதிப்பகம்

தருமையாதீனம்

1984 [அடக்கவிலை பைசா 76 | —

வெளியீடு எண். 833.

KOTHANDAVAR LIBRARY, KOVILOOR
25257
73-1

உ
சிவமயம்

புன்கூர்ச் சிவப்பிரகாசர்

இயற்றிய

சிவப்பிரகாசக்கட்டளை

இந்நூல்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருவுளப்பாங்கின்வண்ணம்

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

குருபூசைவிழா மலராக

"ஞானசம்பந்தம் பதிப்பகத்தில்"


வெளியிடப்பெற்றது.

தருமையாதீனம்

20—5—1984

ஞானசம்பந்தம் அச்சகம்,
தருமபுரம்

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக
பரமாசாரிய சுவாமிகள்

உ

குருபாதம்

முன்னுரை

ஆய்வார் பதிபசு பாசத்தின் உண்மையை ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல் லாங்கல்வி கேள்வி
[யல்லல்
ஓய்வார் சிவானந்த வாரியுள் ளேயொன் றிரண்டுமறத்
தோய்வார் கமலையுள் ஞானப்ரகாசன் மெய்த்
[தொண்டர்களே.

சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் யாவும் செய்யுள் வடிவிலேயே அமைந்தன. அவற்றுக்குப் பழமையாகவே உரைகளும் தோன்றின. எனினும் அவ்வுரைகளும் பலரால் எளிதில் அறியமுடியாதனவாய் உள்ளன. இதுகருதியும் சித்தாந்தத்தைத் தொடக்கநிலையில் உள்ளவர்களுக்கு உணர்த்தவேண்டியும் பலகட்டளை நூல்களை நம்முன்னோர் செய்துள்ளனர்.

'கட்டளை' என்பது 'வரையறை' எனப் பொருள் படும். கட்டளை நூல்கள் சித்தாந்த உண்மைகளைத் தடைவிடை முறையால் விரிவாகக் கூருமல் 'முடிவுகள் இவை' என்பதைமட்டும் திட்டவட்டமாகத் தொகுத்துக்கூறும். சுருக்கமாகக் கூறினல் கட்டளைகள் என வழங்கப்பெறுபவை 'சித்தாந்தக் கொள்கைகளின் பட்டியல்' எனலாம்.

இத்தகு சிறப்பு வாய்ந்த கட்டளை நூல்களுள் சிவப்பிரகாசக் கட்டளை தொன்மையானது, திருத்தருமையாதீனம் பத்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக ஞானசம்பந்தபரமாசாரியசுவாமிகளிடத்து ஞானேபதேசம்

பெற்றவர்கள் ஆதீனத்து முனிபுங்கவர் ஸ்ரீ வெள்ளியம்பல வாணத் தம்பிரான் சுவாமிகள், இம்முனிவரிடம் கல்வி பயின்ற புன்கூர்ச் சிவப்பிரகாசர் இயற்றியது இச்சிவப்பிர காசக்கட்டளை.

தத்துவம், தத்துவத்தோற்றம், தத்துவகுணம், அவத் தையின் இயல்பு, தசகாரியம் என்னும் இவற்றை, ஓரளவு கற்றோரும் நன்கு உணருமாறு இந்நூல் இனிது விளக்கு கின்றது.

'ஓரும் வேதாந்தத்து உச்சியில் பழுத்த சாரம் கொண்ட' சைவ சித்தாந்த நூல்கள் பலவற்றை வெளி யிட்டருளியும் அனைத்துலகச் சைவசித்தாந்தக் கருத் தரங்கம் கண்டருளியும் சித்தாந்த சைவச் செந்நெறியைச் செவ்வனே பரவச்செய்துவரும் தருமையாதீனம் இருபத் தாறுவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருவுளப் பாங்கின்வண்ணம்தருமையாதீனமுதற்குரவர் ஸ்ரீகுருஞான சம்பந்தர் குருபூசை விழாமலராக இந்நூல் வெளியிடப் பெற்றுள்ளது.

அன்பர்கள் இந்நூலைப் பெற்றுக் கற்றுச் சித்தாந்த சைவ உண்மைகளை உணர்ந்து நன்னெறி கடைப்பிடித்து நலமெலாம் பெற்றுய்வார்களாக.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின்
உத்தரவுப்படி,

தருமபுரம்
20—5—84

வித்துவான். சுவாமிநாதத் தம்பிரான்.

73-1

குருபாதம்

தருமையாதீனத்தை நிறுவியருளிய

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வரலாறு

தென்பாண்டி நாட்டிலே ஸ்ரீ வில்லிபுத்தூரிலே கார்காத்தவேளாளர் குலத்திலே சுப்பிரமணியப் பிள்ளை என்பவர் கற்பிற் சிறந்த மீனாட்சியம்மையை மணந்து வாழ்வாங்கு வாழ்ந்துவந்தார். எல்லா நலன்களும் இருந்தும் மகப்பேறு இல்லாக் குறை மனத்தை வருத்தியது குல தெய்வமாகவும் ஆன்மார்த்தமூர்த்தியாகவும் உள்ள ஆலவாய் ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானிடத்து நாளும் குறையை விண்ணப்பித்துச் சிறப்பொடு பூசையும் புரிந்துவந்தார். சொக்கேசர் திருவருளால் மீனாட்சி அம்மையிடத்து ஞானக்குழந்தை சோமவார நாளன்று உதித்தது. திருஞான சம்பந்தரைப்போல் இக்குழந்தையும் சிவம்பெருக்க வேண்டும் என எண்ணிய தாய் தந்தையர்கள் குழந்தைக்கு "ஞானசம்பந்தர்" எனப் பெயரிட்டனர்.

ஞானசம்பந்தர் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தார். ஐந்தாண்டுப் பிராயத்தில் கலைபயிலத் தொடங்குவித்தனர். ஞானசம்பந்தர் கலைஞானம் யாவும் கல்லாமலே கற்றார். அது கண்டு பெற்றோர் வியப்புற்றனர் தமது ஆன்மார்த்த மூர்த்தியைத் தரிசிக்க எண்ணித் திருஆலவாய்ப்பதிக்குத் தன் ஞானப் புதல்வரையும் உடன் அழைத்துப் புறப்பட்டனர். அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவாய்ப் பதியை அடைந்தனர். பொற்றாமரைப்பொய்கையில் நீராடி புலவர் திலகமாக உள்ள ஸ்ரீசொக்கலிங்கப்பெருமானையும் தீந்தமிழின் சுவையாக உள்ள ஸ்ரீ மீனாட்சியம்மையையும் வணங்கி வழிபட்டுச் சிலநாள் மதுரையிலேயே தங்கியிருந்

தனர். பிறகு பெற்றோர் ஸ்ரீ வில்லிபுத்தூர் செல்ல எண்ணி ஆலவாய்அண்ணலிடம்விடைபெற்றனர். ஞானசம்பந்தர் மீது சொக்கேசர் திருவருள் பதிந்தமையால், ஞானசம்பந்தர் பெற்றோர்களைப் பார்த்து, "தொடர்ந்து நின்றதாயும் தந்தையும் இத்திருக் கோயிலில் வீற்றிருக்க அவர்களை விட்டு எப்படிப் பிரிவேன்? என் உடலுக்குத் தாயும் தந்தையுமாகிய உங்களுடன் வர இயலாது" என்று கூறினர். அதுகேட்டப் பெற்றோர் கலங்கினரேனும் "திருவருளால் கிடைத்த குழந்தை திருவருளைப்பெருக்க முற்படுகிறது; இதுவும் இறைவன் திருவருள் போலும்" எனத் தெளிந்தனர். ஸ்ரீ வில்லிபுத்தூருக்குத் திரும்பினர்.

ஞானசம்பந்தர் வழக்கம்போல் ஒருநாள் பொற்றாமரையில் நீராடச்சென்றார். கரையில் தொண்டர்கள் பலர் சிவபூசை புரிவதைக்கண்டு தாமும் அவ்வாறு சிவபூசை புரியஎண்ணினர். எண்ணத்தை இறைவன் சந்நிதானத்தில் விண்ணப்பித்தார். கருத்தறிந்து முடிக்கும் கருணைவள்ளல் அன்றிரவு ஞானசம்பந்தர் கனவில் தோன்றி, "ஞானசம்பந்தா! நீ விரும்பிய வண்ணம் நாம் சிவலிங்கத் திருமேனி கொண்டு பொற்றாமரைத் தடாகத்தில் ஈசான மூலையில் கங்கைக்குள் இருக்கிறோம்; நாளை காலையில் வந்து நம்மை எடுத்துப் பூசிப்பாயாக" என அருள்பாலித்தார். துயில் உணர்ந்த ஞானசம்பந்தர் சொக்கேசர்பணித்தவண்ணமே பொற்றாமரைத் தடாகத்தில் மூழ்கிச் சிவலிங்கத் திருமேனியைக் கண்ணுக்கினிய பொருளாகப்பெற்றார். பூசனைமுறையினை அறிய ஆசாரியன் வேண்டுமே என எண்ணி ஆலவாயண்ணலிடம் முறையிட்டார். சொக்கேசர் அன்று இரவு ஞானசம்பந்தர்கனவில்எழுந்தருளிவந்து, "ஞானசம்பந்தா! நமது உபதேச பரம்பரையில் வந்தவர் திருவாரூர் ஞானப்பிரகாசர்; அவரிடம் சென்று உபதேசம் பெற்று நம்மை விதிப்படிப் பூசிப்பாயாக" என அருளினர். அவ்வண்ணமே கமலைஞானப்பிரகாசருக்கும் கனவில்தோன்றி

"வருகிற சோமவாரத்தன்று ஞானசம்பந்தனுக்கு விதிப்படி ஞானோபதேசம் செய்து சிவபூசை எழுந்தருளப் பண்ணிக் கொடுக்க" என அருளினார்.

ஞானசம்பந்தர் காலையில் எழுந்து திருவாரூருக்குப் புறப்பட்டார்; திருவானைக்கா முதலியதலங்களை வணங்கிச் சோமவாரத்தன்று காலையிலேயே திருவாரூர் சேர்ந்தார். கமலாலயத்தில் நீராடித் திருக்கோயில் சேர்ந்து வலம்வந்த ஞானசம்பந்தர் சித்தீச்சரம் தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் சிவயோகத்தில் அமர்ந்திருந்த ஞானப்பிரகாசரைக் கண்ட வுடன் காந்தங்கண்ட இரும்பு போல் இவரே தமது ஆசாரியன் என்றுணர்ந்து திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். ஞானப்பிரகாசரும் ஞானோபதேசம் செய்து சொக்கநாதர் பூசையையும் எழுந்தருளப்பண்ணிக்கொடுத்தார்.

வழக்கம்போல் திருக்கோயிலுக்கு எழுந்தருளிய ஞானப்பிரகாசர் ஒருநாள் வழிபாடு முடித்து அர்த்தயாமம் ஆகும்வரையில் சித்தீச்சரம் தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் சிவயோகத்திலிருந்து அர்த்தயாம பூசையைத் தரிசித்து வீடுதிரும்பினார். திரும்புகையில்கைவிளக்குப்பணிவிடைக் காரன் உறங்கிவிட, அக்கைவிளக்குப் பணியை ஞானசம்பந்தரே மிக்க மகிழ்ச்சியுடன் மேற்கொண்டார். வீடு சேர்ந்த ஞானப்பிரகாசர் 'நிற்க' எனப்பணித்து உள்ளே சென்றார். ஞானசம்பந்தர் ஆசாரியரின் ஆணை 'நிற்க' என்பதுதானே என்று எண்ணியவராய் அவரால் நிலை நிறுத்தப்பெற்ற சிவயோக சமாதியிலேநின்றார். அன்றிரவு பெருமழை பெய்தும் ஞானசம்பந்தர்மீது துளிகூடப்பட வில்லை; விளக்கோ சுடர்விட்டெரிந்தது விடியலில் இந் நிலையைக்கண்ட குருபத்தினியார் குருவுக்குத் தெரிவிக்க ஞானப்பிரகாசரும் ஞானசம்பந்தரது பெருநிலை கண்டு வியந்து "அப்பனே! நீ ஆசாரியனாகும் தகுதியுடையாய்; ஆகவே நீ மயிலாடுதுறைக்கு அண்மையிலே உள்ளதும், தருமரால் பூசிக்கப்பெற்றதும், வில்வாரண்ய க்ஷேத்திர

மூமான தருமபுரத்திலமர்ந்து பக்குவ ஆன்மாக்கட்கு உண்மையை உபதேசவாயிலாக உணர்த்துவாயாக!" என ஆணைதந்தனர். அதுமுதலாக ஞானசம்பந்தர், குருஞானசம்பந்தராயினர். "தெளிவுகுருவின் திருவார்த்தை கேட்டல்" என்பதை நினைத்தார். ஆசிரியர் ஆணையைச் சிரமேற்கொண்டார். தருமபுரம் சார்ந்தார். பல்லாண்டு தருமபுரத்தில் வீற்றிருந்து பலஉயிர்க்கு உபதேசவாயிலாக உண்மை உணர்த்தினர். சைவ சித்தாந்தத்தை தக்க முறையில் பரவச்செய்தார். தமது பேரின்ப அநுபவத்தை எல்லோரும் அநுபவிக்கவேண்டித் திருப்பாடல்கள் வாயிலாக அவற்றை அருளிச்செய்தார். அவை சிவபோகசாரம், சொக்கநாதவெண்பா, முத்திநிச்சயம், சொக்கநாதக்கலித்துறை, ஞானப்பிரகாசமாலை, திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல், சோடசகலாப்பிரசாதச்டகம், நவரத்தினமாலை முதலியஎட்டுநூல்களாக இலங்குகின்றன இவைபண்டார சாத்திரம் எனப்பெறும்.

இவ்வாறு பல்லாண்டு ஞான அரசாட்சி புரிந்த ஸ்ரீகுருஞானபந்தர் ஜீவசமாதிகூடத்திருவுளங்கொண்டார். தமது சீடர்களுள் அதிதீவிரநிலையில் உள்ள ஆனந்த பரவசர்க்கு ஞானோபதேசம் செய்து தமது பீடாதிபத்தியத்தை ஒப்புவித்து ஜீவசமாதி கூடினர். அதிதீவிர நிலையில் இருந்த ஆனந்தபரவசர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருக்கோயிலின் மேல்பால்ஜீவசமாதிகூடிவிட்டார். அஃது அறிந்த ஏனைய சீடர்கள் ஞானசம்பந்தர் சந்நிதி சேர்ந்து தங்களுக்குக் குருநாதன் இல்லை என்றகுறையைப்போக்கிக் குருசந்தான பரம்பரை நீடுவாழ அருள் புரிய வேண்டினர். ஸ்ரீ குருஞானசம்பந்தர் சமாதிநிலையினின்றும் பிரிந்துவந்து தமது சீடர்களுள் ஒருவரான சச்சிதானந்தருக்கு ஞான தீட்கைஷ செய்து ஞானசமாதி கைகூடச்செய்து அவரைப் பீடத்திலமர்த்தி வைகாசி மாதம் கிருஷ்ணபக்க சஷ்டி திதியில் சிவலிங்கத் திருவுருவின் அடியில் ஜீவசமாதி கூடினர். கி பி. 16 ஆம் நூற்றாண்டில் ஸ்ரீ குருஞானசம்பந்தரால் தோற்றுவிக்கப்பெற்ற தருமையாதீனம் மொழித்தொண்டும், சமயத்தொண்டும், சமூகத்தொண்டும் ஒல்லும் வகையெல்லாம் ஆற்றிவருகிறது.

அனைத்துலக சைவ சித்தாந்த முதல் கருத்தரங்கம்
கண்டருளிய



தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சிவப்பிரகாசக்கட்டளை

ஆன முப்பதோ டாறும் அறுபதும்
மான தத்துவம் வாய்மை விளம்பிட
மோன ஞான புரத்து முதல்சிவ
ஞான தேசிகன் நற்பதம் போற்றுவாம்.

மன்னிய சிறப்பில் துன்னிய ஆகம
நெறிமுழு துணர்ந்து முறையுரை குருசிவ
ஞான தேசிகன் மாணடி பரவி
அளவையின் முப்பொருள் ஆய்ந்து பசுவா
வுளவியன் பதியரு ளுண்மை காணிய
வைத்த கட்டளை வகுப்பாம்
தத்துவ வரிசை தாம்புலப் படற்கே.

அளவைகளால் அறிந்த பதி பசு பாசங்களுக்கு ஆகமங்களால் இலக்கணம் தேர்ந்து, சாதித்து அறியும் பொருளாகிய ஆத்துமா, சிவப்பேற்றைப் பொருந்தும் வாயிலாகச் சோதிக்கவேண்டிய தத்துவங்கள் பின்வருவன :—

முதல் அங்கம்

தத்துவநாமம்

(1) உண்ணிலைக்கருவிகள்

பூதங்களாவன:-

பிருதுவி
அப்பு
தேயு
வாயு
ஆகாசம் ஆக – 5

ஞானேந்திரியங்களாவன;–

சுரோத்திரம்
துவக்கு
சக்ஷு
சிங்நுவை
கிராணம் ஆக – 5.

தன்மாத்திரைகளாவன;-

சப்தம்
ஸ்பரிசம்
ரூபம்
ரசம்
கந்தம் ஆக – 5.

கன்மேந்திரியங்களாவன:–

வாக்கு
பாதம்
பாணி
பாயு
உபஸ்தம் ஆக – 5.

அந்தக்கரணங்களாவன;-

மனம்
புத்தி
அகங்காரம்
சித்தம் ஆக – 4.

ஆக ஆத்துமதத்துவம் 24.

இதற்கு ஆத்துமதத்துவம் என்றும், அசுத்த தத்துவம் என்றும், போக்கிய காண்டம் என்றும் பெயர்.

வித்யாதத்துவங்களாவன :-

காலம்
நியதி
கலை
வித்தை
அராகம்
புருடன்
மாயை ஆக – 7.

இதற்குவித்தியாதத்துவம் என்றும், சுத்தாசுத்ததத்துவம் என்றும், போககாண்டம் என்றும் பெயர்.

சிவதத்துவங்களாவன :-

சுத்தவித்தை
ஈஸ்வரம்
சாதாக்கியம்
சக்தி
சிவம் ஆக – 5.

இதற்குச் சிவதத்துவம் என்றும், சுத்ததத்துவம் என்றும். பிரேரககாண்டம் என்றும் பெயர்.

இவை முப்பத்தாறும், உண்ணிலைக்கருவிகள்

(2) புறநிலைக்கருவிகள்

பிருதுவியின்கூறு :-

மயிர்
எலும்பு
தோல்
நரம்பு
தசை ஆக – 5

அப்புவின்கூறு :-

ஒடுநீர்
உதிரம்
சுக்கிலம்
மூளை
மச்சை ஆக – 5

தேயுவின்கூறு :-

ஆகாரம்
நித்திரை
பயம்
மைதுனம்
சோம்பல் ஆக – 5

வாயுவின்கூறு :-

ஓடல்
நடத்தல்
நிற்றல்
இருத்தல்
கிடத்தல் ஆக – 5.

ஆகாசத்தின்கூறு :-

காமம்
குரோதம்
உலோபம்
மோகம்
மதம் ஆக - 5.

தசவாயுக்களாவன :-

பிராணன்
அபானன்
உதானன்
வியானன்
சமானன்
நாகன்
கூர்மன்
கிரிகரன்
தேவதத்தன்
தனஞ்சயன் ஆக - 10.

தசநாடிகளாவன :-

இடை
பிங்கலை
சுழுமுனை
காந்தாரி
அத்தி
சிகுவை
அலம்புடை
புருஷன்
குகு
சங்கினி ஆக - 10.

வசனாதிகளாவன :-

வசனம்
கமனம்
தானம்
விசர்க்கம்
ஆனந்தம் ஆக - 5.

வாக்குகளாவன :-

சூக்குமை
பைசந்தி
மத்திமை
வைகரி ஆக - 4.

குணங்களாவன :-

சத்துவம்
ரஜஸ்
தமஸ் ஆக - 3.

அகங்காரங்களாவன :-

தைசசாகங்காரம்
வைகாரிகாகங்காரம்
பௌதாதிகாகங்காரம்
ஆக - 3.

இவை அறுபதும் புறநிலைக் கருவிகள்.

ஆக தத்துவம் தொண்ணூற்றாறு.

இரண்டாம் அங்கம்

தத்துவத்தோற்றமும் ஒடுக்கமும்

பரமசிவனுடைய பராசக்தி அருளினுலே குடிலை யிலே நாதம்தோன்றும் ; நாதத்திலே விந்துதோன்றும் ; விந்துவிலே சாதாக்கியம் தோன்றும் ; சாதாக்கியத்திலே மகேசுவரம் தோன்றும் ; மகேசுவரத்திலே சுத்தவித்தை தோன்றும், இவையைந்தினுள் முன்சொன்ன விந்து விலே நாலுவாக்கும், ஐம்பத்தோரக்ஷரமும், எண்பத் தொருபதமும், இருநூற்றிருபத்து நான்கு புவனமும், சப்த கோடி மஹாமந்திரமும், சகலசாஸ்திரமும், விஞ்ஞானகலர் பிரளயாகலருக்குத் தனு கரண புவனபோகங்களும், சரியை கிரியை யோகங்களில் நின்ரோர்க்குச் சாலோக சாமீப்ய சாரூப்யமென்னும்பதமுத்திகளும்.பஞ்சகலைகளும் தோன்றும். இவைகள் சுத்தமாயையின் தோற்றம் என்றறிக.

இனி அனந்ததேவ நாயனுர் அருளினுலே அசுத்த மாயையிலே நின்று காலமும், நியதியும், கலையும் தோன்றும். கலையிலே வித்தை தோன்றும்; வித்தை யிலே அராகம் தோன்றும்.

இனி உருத்திர தேவநாயனுர் அருளினுலே முன் சொன்ன கலையிலே மூலப்பிரகிருதி தோன்றும்; மூலப் பிரகிருதியிலே முக்குணங்களும் தோன்றும்; முக்குணங் களும் தோன்ருது நின்றவிடம் அவ்வியக்தம்; இந்த அவ்வியக்தத்திலே சித்தமும், புத்தியும் நிற்கும். புத்தி யிலே அஹங்காரம் தோன்றும். அதுதான் 'யான் எனது' என்றுவிகற்பித்துவரும். அதுதான் அகந்தைக்குவித்தாகும். அதுதான் தைசசாகங்காரமென்றும், வைகாரிகாகங்கார

என்றும், பௌதாதிகாகங்காரம் என்றும் மூன்றுவிதமாயிருக்கும். தைசசாகங்காரத்திலே சத்துவ குணத்தினையுடைய மனமும், புத்தியும், இந்திரியங்களென்று பெயரையுடைய சுரோத்திராதிகள் ஐந்தும் தோன்றும். வைகாரிகாகங்காரத்திலே ரஜோ குணத்தினையுடைய கன்மேந்திரியங்களாகிய வாக்காதிகள் ஐந்தும் தோன்றும். பௌதாதிகாகங்காரத்திலேதமோ குணத்தினையுடையதன் மாத்திரைகளாகிய சப்தாதிகள் ஐந்தும் தோன்றும். சப்தத்திலே ஆகாசம் தோன்றும். பரிசத்திலே வாயு தோன்றும். ரூபத்திலே தேயு தோன்றும். ரசத்திலே அப்பு தோன்றும். கந்தத்திலே பிருதிவி தோன்றும். ஒடுங்கும் காலத்துத் தோன்றின அடைவே ஒடுங்கும்.

மூன்றும் அங்கம்

தத்துவகுணங்கள்

பிருதிவி உரத்துத்தரிக்கும், அப்பு குளிர்ந்து பதஞ் செய்யும்; தேயு சுட்டுஒன்றுவிக்கும்; வாயு சலித்து எவையும்திரட்டும்; ஆகாசம் நிரந்தரமாய் இடம் கொடுக்கும். சுரோத்திரம் சப்தத்தை அறியும்; துவக்கு ஸ்பரிசத்தை அறியும், சக்ஷு ரூபத்தை அறியும்; சிங்nuவை ரசத்தை அறியும்; கிராணம் கந்தத்தை அறியும், வாக்குவசனிக்கும்; பாதம்கமனம் பண்ணும்; பாணி இடுதலும் ஏற்றலும் செய்யும்; பாயு மலவிசர்க்கத்தைச் செய்யும், உபஸ்தம் ஆனந்திக்கும்; மனம் பற்றும்; புத்தி நிச்சயிக்கும்; அகங்காரம் எழுந்திருக்கும்; சித்தம் சிந்திக்கும். காலம் செல்காலம், நிகழ்காலம் எதிர்காலமென மூன்றும். நியதி கருமத்தை நிச்சயம் பண்ணும்; கலை ஆணவத்தைச் சிறிது நீக்கும்; வித்தை அறிவை எழுப்பும், அராகம் பெற்றதைச் சிறிதாக்கிப் பெருததிலே இச்சையுண்டாக்கும்; புருடன்

விடயத்திலே அழுத்துவிக்கும்; மாயை மயக்கும்; சுத்த வித்தை ஞானமேறிக் கிரியை குறைந்திருக்கும்; ஈசுவர தத்துவம்ஞானம்குறைந்துகிரியைஏறிஇருக்கும்; சாதாக்கிய தத்துவம் ஞானமும் கிரியையும் ஒத்திருக்கும், சத்தி தத்துவம் கிரியையாய் இருக்கும்; சிவதத்துவம் ஞானமாயிருக்கும்; சிவதத்துவம் சிவனுக்கிடம், நாதம் என்பது பெயர். சத்திதத்துவம் காருண்யத்துக்கிடம், விந்து என்பது பெயர். சாதாக்கியதத்துவம் அனுக்கிரகத்துக்கிடம், சதாசிவம் என்பது பெயர். ஈசுவரதத்துவம் திரோபவத்துக்கிடம், மகேசுவரம் என்பதுபெயர். சுத்தவித்தை சங்காரத்துக்கிடம், உருத்திரம் என்பது பெயர்.

நான்காம் அங்கம்

அவத்தை தரிசனம்

1. கீழாலவத்தை

இவற்றுடனே கூடிநின்று ஆத்மா புசிக்கும் அவதரத்தில் உணர்த்தும் முறைமை எங்ஙனமென்னில்;

கீழாலவத்தை–5, மேலாலவத்தை–5, சுத்தாவத்தை-5, இந்தக்கேவல சகல சுத்தம்மூன்றிற் காரியாவத்தை – 15, காரணவத்தை – 3, ஆக அவத்தை – 18. இதிற் கீழாலவத்தைக்குத் தத்துவம்–35, மேலாலவத்தைக்குத்தத்துவம்–36, அவை எப்படியென்னில், கீழாலவத்தையாவன – சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்ஆகிய – 35க்கு அகக்கருவு முப்பத்தாரிற் பூதங்களைந்தும் கலாதிகளாறும் சிவதத்துவம் ஐந்தும் ஆகிய பதினறும் கழித்து மற்றவையுடனே புறக்கருவி அறுபதில் வாயுக்கள் பத்தும் வசனாதிகள் ஐந்தும் ஆகிய – 15 உம் கூட்டவேண்டும்.

இவற்றைக் கூட்டவேண்டுவானேன், அவற்றைக் கழிக்க வேண்டுவானேன் எனில், அவத்தைக்கு நிற்கும் கருவிகள் கூட்டப்பட்டு நில்லாக்கருவிகள் கழிக்கப்பட்டன.

ஆத்மா, ஞானேந்திரியங்கள் ஐந்தும், கன்மேந்திரியங்கள் ஐந்தும், தன்மாத்திரைகள் ஐந்தும், அந்தக்கரணம் நான்கும், உள்ளம்ஒன்றும், வாயுக்கள்பத்தும், வசனாதிகள் ஐந்தும் ஆகிய – 35 கருவிகளுடனே லலாடஸ்தானத்திலே நின்ற அவதரம் சாக்கிரம்.

ஞானேந்திரியங்கள் ஐந்தும், கன்மேந்திரியங்கள் ஐந்தும் ஆகிய 10 – உம் லலாடஸ்தானத்திலே நிற்க, மற்ற 25 –கருவிகளுடனே கண்டஸ்தானத்திலே நின்ற அவதரம் சொப்பனம்.

தன்மாத்திரைகள் ஐந்தும் சித்தம்நீங்கலாக அந்தக் காரணங்கள் மூன்றும், பிராணவாயு நீங்கலாக வாயுக்கள் ஒன்பதும் வசனாதிகள் ஐந்தும், ஆகிய, 22–கருவிகளும் கண்டஸ்தானத்திலே நிற்கச் சித்தமும் பிராணவாயுவும் உள்ளமும் ஆகிய – 3 கருவிகளுடனே இருதயஸ்தானத்திலே நின்ற அவதரம் சுழுத்தி.

சித்தம்ஒன்றும் இருதய ஸ்தானத்திலே நிற்கப்பிராண வாயுவும் உள்ளம்ஒன்றுடனே மூலாதாரத்திலே அடங்கின அவதரம்துரியாதீதம். இப்படிக் கீழாலவத்தையைத் தரிசிக்க. இங்கே உள்ளமென்றது பிரகிருதியைஎனக்கொள்க. இதற்குக் கேவலாவஸ்தை என்பது பெயர்.

2. மேலாலவத்தை

மேலாலவத்தைகளாவன – இப்படிக் கேவலாவத்தையைப் பொருந்தி அதீதப்பட்டுக் கிடக்கும் அவதரத்தில் உணர்த்து முறைமை எங்ஙனமென்னில், விளங்காநின்ற விந்துசத்தி ஆத்மாவுக்குள்ள கருமத்துக்கீடாக வாக்குகளைத் தோற்றுவிக்கும்பொருட்டு ஒருநாதத்தை உண்டாக்கும்.

சூக்குமையென்னும் வாக்கு அந்த நாதமாகிய அறிவுதானே வடிவாகவரும் –பைசந்தி என்னும் வாக்கு உந்திஸ்தானத்திலே பொருந்தி. வெவ்வேறுய்வரும் அக்ஷரங்களினுடைய சொரூபங்கள்தோன்றும முறைமை தெரியாதபடி மறைந்திருந்து மயில் முட்டைக்குள் சலமானது புறம்பே மயிலின் நிறமாய் ரூபிகரிக்கத் தக்கதாயிருந்தும், உள்ளே பஞ்சவர்ணங்களும் கூடி உருத்தெரியாமல் சலமயமாய்த் தோன்றினாற்போலச் சித்தத்தினிடத்திலே நினைவுமாத்திரமாய் நிற்கும். – மத்திமை என்னும் வாக்கு பிராணவாயுவோடும்கூடி அக்ஷரங்களினுடைய சொரூபங்களை ஒழுங்குபட நிறுத்திச் செவிக்குக் கேளாமல் உள்ளறிவுமாய்த் தொனியுமுண்டாய்க் கண்டஸ்தானத்திலே முற்பட்டுவரும். –வைகரி என்னும் வாக்கு பிராணவாயுவோடும் கூடிவந்து உதானவாயுவிலேயும் பந்தித்துச் செவிப்புலனிடத்துக் கேட்கத்தக்கதாக நினைவிலுண்டான வசனத்தைச் சொல்லும்.

இங்குச்சொல்லப்பட்ட வாக்குகளுக்கு ஸ்தானமும் வடிவுமாவன :— சூக்குமைக்கு ஸ்தானம் நாபிஅடியும், வடிவு நாதத்துவமுமாம். பைசந்திக்குஸ்தானம் உந்தியும், வடிவு பிராணவாயுவுமாம். மத்திமைக்கு ஸ்தானம், நெஞ்சும்கண்டமும், வடிவுபிராணவாயுவுமாம். வைகரிக்கு

ஸ்தானம் நாக்கின் அடியும் வடிவு பிராணவாயுவும் உதான வாயுவுமாம். இந்த நான்கு வாக்குந் தோன்றுகைக்குக் காரணமாயிருக்கின்ற பஞ்சமை என்றொரு வாக்குண்டு; அதற்கு ஸ்தானம் மூலாதாரம்; அது பிரணவ சொரூபமா யிருக்கும். வாக்கு நான்கும் காரியப்படுமுறைமை அறிவித்தது, சிவதத்துவமும் சத்திதத்துவமும் சூக்குமை யைக் காரியப்படுத்தும். சாதாக்கியதத்துவம்பைசந்தியைக் காரியப்படுத்தும். ஈசுவரதத்துவம் மத்திமையைக் காரியப் படுத்தும். சுத்த வித்தை வைகரியைக் காரியப்படுத்தும்.

இப்படி வாக்கு நான்கினும் உணர்த்த உணர்ந்த ஆத்மா சகலாவத்தைப்பட்டுவருகிறது. எப்படி என்னில், கிரியாசத்தி சத்திதத்துவத்தை யெழுப்பச், சத்திதத்துவம் காலத்தையும் நியதியையும் கலையையும் எழுப்பக், கலை தழல்பொடி நீக்கினாற்போல ஆணவமலத்தைச் சிறிதே நீக்க, ஆத்மா கலையே வடிவாய்த் துரியத்திலே பிராண வாயுவைக்கூடிச் சுழுத்தன் ஆவன்.

இனி ஞானசத்தி சுத்தவித்தையை எழுப்பச் சுத்த வித்தை வித்தையை யெழுப்ப, வித்தை ஆத்மாவுக்கு அறிவை எழுப்பும், இனி இச்சாசத்தி ஈஸ்வரதத்துவத்தை எழுப்ப, ஈஸ்வரதத்துவம் அராகதத்துவத்தை எழுப்ப, அராகதத்துவம் ஆத்மாவுக்கு இச்சையை எழுப்பும். இப்படி ஆத்மா இச்சாஞானக்கிரியாசொரூபனாய்இருக்கும். ஆத்மாவானது காலம், நியதி, கலை, வித்தை, அராகம் இவ்வைந்தும் தனக்கு உடம்பாகக் கொண்டு இந்திரியங் களுடனே கூடிச் சத்தாதி விடயங்களைப் புசிக்க வருகிற அவதரத்தைப் புருடதத்துவமென்றுசொல்லுவர். ஆதலால் ஆத்மாவுக்குப் பஞ்சகஞ்சுகன் என்றுபெயர் ஆம்.

இப்படிப் புருடதத்துவமான அவதரத்தில் கிரியா சத்தி சாதாக்கிய தத்துவத்தை எழுப்ப, சாதாக்கியம் பிரகிருதியை எழுப்ப, பிரகிருதி குணரூபமாம் ஆத்மாவைக் கூட, ஆத்மா குணமே வடிவாய்ப் போகத்துக்கு ஏதுவான

கருவிகளைக் கூடாநிற்கும். இப்படி ஆத்மா கருவிகளைக் கூடிச் சொப்பனஸ்தன் ஆவன். சொப்பனஸ்தனை அவதரத்தில் உணர்த்து முறைமை பதினைந்து பிரகாரமாயிருக்கும். அவை எங்ஙனமென்னில் - அகங்காரம், புத்தி, மனம், சித்தம், உள்ளம் என்னும் தத்துவங்களை அகார - உகார - மகார - விந்து - நாதம் என்னும் அக்ஷரங்கள் எழுப்ப அந்த அக்ஷரங்களைப் பிரமா-விஷ்ணு-உருத்திரன் மஹேசுவரன் - சதாசிவன் என்னும் - அதிதேவதைகள் எழுப்ப, ஆத்மா இவையே வடிவாய்ச்சூட்சும தேகியாய்ச் சாக்கிரத்தில் புசிப்பது போலச்சொப்பனத்திலும் புசிக்கும்.

இனி இவற்றுடனே சாக்கிரத்தனுவன், சாக்கிரஸ்தனை அவதரத்திலுணர்த்து முறைமை எங்ஙனம் என்னில், ஆகாசம் இடமாக நின்று சுரோத்திரத்தைப் பொருந்திச் சப்தத்தை அறிந்தால் வாக்குவசனிக்கும். வாயுவினிடமாக நின்று துவக்கினைப்பொருந்திஸ்பரிசத்தைஅறிந்தால்பாதம் கமனிக்கும். அக்கினியினிடமாக நின்று சக்ஷுவைப்பொருந்தி ரூபத்தையறிந்தால் பாணியிடுதலும் ஏற்றலும்செய்யும். அப்புவினிடமாகநின்று சிங்ஙுவைப்பொருந்திரசத்தை அறிந்தால் பாயுமலசலத்தைவிடும். பிருதிவியினிடமாக நின்று கிராணத்தைப் பொருந்திக் கந்தத்தை அறிந்தால் உபஸ்தம் ஆனந்திக்கும். இப்படிக்காரியப்படுகிற அவதரத்தில் ஞானசத்தி சிவதத்துவத்தை எழுப்பச் சிவதத்துவம் மாயையை எழுப்ப, மாயை குணரூபமாய் நின்று மும் மூன்றென்பது குணங்களாலேயும் பேதிப்பித்துப் பொய்யை மெய்யென்று மயக்காநிற்கும். குணங்களொன்பதாவன-சத்துவத்திலே சத்துவம், சத்துவத்திலே ரஜஸு, சத்துவத்திலே தமஸு-ரஜஸிலே ரஜஸு, ரஜஸிலே தமஸு, ரஜஸிலே சத்துவம்-தமஸிலே தமஸு, தமஸிலே ரஜஸு என்பனவாம்; இதனாலே ஆத்மா ஜனனமரணப்பட்டு வரும். இதற்குச் சகலாவத்தை யென்று பெயர். இப்படி மேலாலவத்தையைத் தரிசிக்க.

3. சுத்தாவத்தை

சுத்தாவத்தையாவன—கன்ம வொப்பும் மலபரி பாகமு முண்டான அவதரத்திலே ஞாஞசாரியனுலே ஞான தீபத்தைப் பெற்றுச் சிவனையும், ஆந்மாவையும், பாசத்தையும், உணர்ந்து அருள்பெறும் அவதரம் எங்ஙனம் என்னில் பூதங்களைத் தரிசிக்கவே ஸ்தூல தேகம் இல்லையாம்; இந்திரியங்களைத் தரிசிக்கவே பூதங்கள் இல்லையாம்; கலாதிகளைத் தரிசிக்கவே அந்தக்கரணங்கள் இல்லையாம்; சுத்த தத்துவங்களைத் தரிசிக்கவே கலாதிகள் இல்லையாம்; அருளைத் தரிசிக்கவே சுத்த தத்துவங்கள் இல்லையாம்.

இது நின்மலசாக்கிரம், நின்மல சொப்பனம், நின்மல சுழுத்தி, நின்மலதுரியம், நின்மல, துரியாதீதம் என-5 ஆம் நின்மலசாக்கிரமாவதுபிரபஞ்சம் அநித்தியமெனத்தோன்றி ஆசாரியர் அனுக்கிரகத்தினுலே பற்றுகப் புகுந்து பொறி புலன் மேலிட்ட பசுகரணங்கள் சிவகரணங்களாய் இருக்கை.

நின்மல சொப்பனமாவது கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றுப் பொருந்துவன மனதிலே கோசரியாமல் இருக்கை. நின்மவ சுழுத்தியாவது இந்தப்பேறுபெற்ருேர் என்னும் நிராசையினுலேபரிணுமத்தை அடைகை. நின்மல துரியமாவது தனக்கு இன்பம் பிறந்த சம்பூரண தசையை அடைகை — நின்மல துரியா தீதமாவது முன் சொல்லப் பட்ட பேறு நான்கும் இன்றிப் பேருய்விடுகை. சம்பூரண தசையிலே நீரிலே முழுகினவனைப் போலவும் நிறைய உண்டவனைப் போலவும் தானன்றிச் சுட்டன்றிச் சொல்லப்படாது. இதற்கு நின்மலாவத்தை யென்றும் பெயர். இப்படிச் சுத்தாவத்தையைத் தரிசிக்க.

4. காரணவத்தை

காரணவத்தையாவன – காரண கேவலமும், காரண சகலமும், காரணசுத்தமும்என மூன்றும் ஆம். காரணகேவலமாவது, சர்வசங்கார காலத்து ஆத்மாக்கள் அசுத்தமாயா காரணத்திலே ஒடுங்கிச்சிருட்டி காலமளவும் ஆணவமலத்தாலே மறைப்புண்டு ஒன்றும் அறியாமல் கிடக்கும் அவதரம் என அறிக.

காரணசகலமாவது, சிருஷ்டி தொடங்கிச் சர்வ சங்காரம் வரும் அளவும் ஆத்மாக்கள் எண்பத்துநான்கு நூறுயிரம் யோனிபேதத்திலும் பிறந்திறந்து திரிகிற அவதரமென அறிக.

காரணசுத்தமாவது, இங்ஙனம் கேவலசகலப்பட்டுப் பிறந்து இறந்து திரியுமவதரத்து ஆணவ மலபாகம்வந்து ஆத்மாக்களுக்கும் இருவினையொப்பும் சத்திநிபாதமும் உண்டான அவதரத்துச் சிவன் ஆசாரிய மூர்த்தமாக எழுந்தருளி இரட்சித்துத் தனதுதிருவருளாலே ஞானத்தையும் கடாக்ஷித்துப் பிராரத்தம் தொலைந்தபின்பு தனது பூரணநிலையோடும் கூட்டிக்கொண்ட அவதரம் என அறிக.

தசகாரியம்

தத்துவ ரூபமாவது, அவற்றின் குணங்களைக்காண்கை

தத்துவ தரிசனமாவது, அவை தன்னிடத்திலே நின்று சீவித்த முறையைக் காண்கை.

தத்துவ சுத்தியாவது, அவை தனக்கு வேறு என்று அறிந்து நீங்குகை.

ஆத்மரூபமாவது, ஆத்ம ஞானம் என்னும் அறிவே வடிவு என அறிகை.

ஆத்ம தரிசனமாவது, தத்துவங்களை அறிந்து நீங்கி இவற்றினின்று நீங்கின அறிவு நானே என அறிகை.

ஆத்ம சுத்தியாவது, பந்தம் முத்தி இரண்டிலும் சிவன் உபகரிக்கிறார் என்று தன்னுடைய சுதந்தர ஆனியை அறிகை.

சிவ ரூபமாவது, தத்துவ முப்பத்தாறிற்கும் அப்பாலாய் வாக்கு மனதீதகோசரமாய் ஞானமே வடிவாய் இருப்பது என அறிகை.

சிவ தரிசனமாவது, தத்துவ முப்பத்தாறையும் அறிவித்துத் தரிசிப்பித்து நீங்கி இவற்றினின்று நீங்கி நிற்கும் ஆத்மாவையும் தரிசிப்பித்து நிற்கின்ற ஞானம்என அறிகை.

சிவயோகமாவது இந்த ஞானம் தன்னைவிட்டு நீங்காது என்று அறிந்து தான் அதுவாய் நிற்கை.

சிவ போகமாவது, தான் அந்த நேயத்திலே நின்று அழுந்திச் சிவத்தைப் பெறுகை.

ஆத்ம ரூபமாவது, ஆத்மாவுக்கும் ரூபம் சொல்லில் ஆத்மா இச்சா ஞானக்கிரியா சொரூபமாய் இருக்கும்.

ஆத்மாவுக்கு இச்சையாவது, விஷயங்களிலே சென்று பற்றுதல்.

ஆத்மாவுக்கு ஞானமாவது, இது இது என்று பகுத்து அறிதல்.

ஆத்மாவுக்குக் கிரியையாவது – சர்வத்தையும் தனது விடயம் என்று பற்றி நின்று செய்துகொள்ளுதல்.

ஆத்ம தரிசனமாவது, ஆத்மாவினுடைய இச்சாஞானக் கிரியையைத் தரிசிக்குமாறு சொல்லில் ஆத்மாவினுடைய இச்சை சீவிக்குமிடத்து அந்தக்கரணங்களிடமாக நின்று சீவிக்கும்.

ஆத்மாவினுடைய ஞானம் சீவிக்குமிடத்து ஞானேந்திரியங்களினிடமாக நின்று சீவிக்கும்.

ஆத்மாவினுடைய கிரியை சீவிக்குமிடத்துக் கன்மேந்திரியங்களினிடமாக நின்று சீவிக்கும்.

இவைகள் அடுத்ததின் தன்மையாதலினின்று ஒழிந்து தத்துவங்களைத் தானன்று என்று கழித்து, அருளே தனுவாகப் பொருந்தித் தத்துவங்களையும் தன்னையும் அந்த அருளையும் தரிசிப்பது.

ஆத்மசுத்தியாவது, ஆத்ம சுத்தியைச் சொல்லுமிடத்துச் சிவனுலே தான் சர்வத்தையும் அறியும் முறைமையும் கண்டு சிவன் ஆத்மாவுக்கு அறியும் முறைமையும் கொடான் என்பதும் கண்டு, சிவனுடைய ஞானசத்தியினுலே தன்னுடைய ஞானம் சீவிக்கும் என்றறிந்து தான் மலமுமாகாமல் சிவமுமாகாமல் நிற்கிறவிடம்.

சிவரூபமாவது, சிவனுக்கு ரூபம் சொல்லில் சிவனும் இச்சா ஞானக் கிரியா சொரூபனுய் இருப்பன்.

சிவனுக்கிச்சையாவது, ஆத்மாக்களைமுத்தியிலேயடைவிக்க வேண்டும் என்பதே.

சிவனுக்கு ஞானமாவது, ஆத்மாக்கள் செய்யப்பட்ட அனுதி கன்மங்கள் அனைத்தையும் திருவுளத்து அடைத்திருத்தல்.

சிவனுக்குக் கிரியையாவது, ஆத்மாக்களுக்குக் கன்ம சாமீப்பியம் பிறக்கும்படி அனுதியாய் வரப்பட்ட கருமங்கள் அனைத்தையும் பக்குவா பக்குவம் அறிந்து கூட்டிப் புசிப்பித்துத் தொலைப்பித்தருளுதல்.

சிவதரிசனமாவது, தான் கன்மம் புசிக்குமிடத்துச் சிவன் தனக்கு மூன்று வகையாக நின்று உபகரிப்பன். அதெப்படி என்னில் அவன்–அவள்–அது–முன்னிலையாக நின்று உபகரிப்பன். இப்படி உபகரிக்குமிடத்துத் தோன்றுகின்ற மூன்றுவகையுமொழிந்து அவையிடமாக நின்று சேஷ்டிப்பித்துத் தான் அக்கன்மத்தைப் புசிக்குமிடத்துத் தன்னிடத்து மறைந்துநின்று இந்திரியங்களையும் தன்னையும் சேஷ்டிப்பித்துத் தனக்கு அந்தக் கன்மம் ருசிக்கும்படிச் செய்து இடைவிடாமல் ஊட்டுகிற தீவரத்தைப் பார்ப்பது.

சிவயோகமாவது, அகண்டபரிபூரணமாகிய சிவத்துள்ளே அழுந்தி உள்ளும் புறமும் எண்ணுமல் சிவனை யுள்ளபடி கண்டு உணர்ந்திருப்பது.

சிவபோகமாவது, பராசக்தியினிடமாகநின்று அனுபவத்துடனே கலந்து சிவானுபவம் பிறக்கச் சிவனுடனே அக்கினிக்கு வெம்மை போலவும் நீருக்குத் தண்மை போலவும் சிவத்திலே இரண்டற அழுந்துவது.

ஆறெடு முப்பதும் அங்கே அடங்கிடிற்
கூறக் குருபரன் கும்பிடு தந்திடும்
தேறே சிவபத மேலா யளித்திடும்
பெருக ஆனந்தம் பேணும் பெருகவே.

— திருமந்திரம்.

சிவப்பிரகாசக்கட்டளை

முற்றுப்பெற்றது.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருவடியே துணை.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

சமயாசாரியர் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்
[போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

சந்தானாசாரியர் துதி

ஈராண்டில் சிவஞானம் பெற்றுயர்ந்த
மெய்கண்டார் இணைத்தாள் போற்றி
தாராண்ட பல்லடியார்க்கு அருள்புரிந்த
அருள்நந்தி நற்றாள் போற்றி
நீராண்ட கடந்தை நகர் மறைஞான
சம்பந்தர் நிழற்றாள் போற்றி
சீராண்ட தில்லைநகர் உமாபதியார்
செம்பதுமத் திருத்தாள் போற்றி.

சமயாசாரியர் திருநட்சத்திரங்கள்

சித்திரைச் சதயத்து அப்பர், சிறந்த வைகாசி மூலத்து
அத்தரைப் பணி சம்பந்தர், ஆனிமா மகத்தில் அந்த
முத்தமிழ் வாத வூரர், முதியநல் ஆடி தன்னில்
சுத்தமாம் சுவாதி நாளில் சுந்தரர் கைலை சேர்ந்தார்.

சந்தானாசாரியர் திருநட்சத்திரங்கள்

சித்திரை அத்தம் உமாபதி ஆவணித் திங்கள்தனில்
உத்திரம் சீர்கொள் மறைஞான சம்பந்தர், ஓதுகன்னி
சுத்தமெய்ப் பூரம் அருணந்தி, ஐப்பசிச் சுவாதிதனில்
வித்தக மெய்கண்ட தேவர் சிவகதி மேவினரே.